25

ஸ்ரீ சண்முகமூர்த்தி காவடிச்சிந்து



Q26
N57.
113197

ஆசிரியர்: ப. அருணாசலத்தேவர்.

சுப்பையா

ஓம் சேண்பகமூர்த்தியே வணக்கம்!

ஆசிரியர்: ப. அருணாசலத் தேவர்
ஓடாத்தூர்.

மதுரை, செந்தமிழ்க்கவி சந்தச்சரபம்

இராஜா ஷண்முகதாஸ் அவர்களால்

இந்நூல் பார்வையிடப்பெற்றது.

இந்தியன் மெடிக்கல் போர்டு, கவர்ன்மெண்ட்
R.I.M.P. பட்டம் பெற்றவரும், பிரபல சோதிடருமான,
விளத்தூர் உயர்திரு. A. முத்தையாதேசிகர் அவர்கள்
அளித்த

(சாற்றுக் கவிகள்)

எங்காட்டி னுக்குமுயர் தென்னாட்டின்
மிக்கவளம் இனிதுற் றோங்கப்
பொன்னாடு மதிசயிக்கப் பூமகட்கோர்
திலகமெனப் பொலிந்து தோன்றும்
நன்னாட்டி னயகமா யமரோடை
யம்பதியெந் நாளும் வாழ்வான்
பன்னாளும் பக்தியுளான் கலைவல்ல
பாவலர்க்கோர் பண்ப னானோன்!

சந்ததஞ் சேர்ந் திலகுசுப குணசீலன்
அபிமானி சங்கஞ் சார்ந்தோன்
பந்தமுளா னமரர்புகழ் நந்திகுல
மகிபாலன் பலநாட் டோர்ந்து
செந்தமிழி னருட்பதமாஞ் சிந்திசைத்தான்
செண்பகமா தேவன் மீது
சிந்தையெலாம் தித்திக்கத் திருஅருணா
சலமெனப்பேர் திகழ்மேலோனே!

மதுரை, செந்தமிழ்க்கவி-சந்தச் சரபம்

இராஜா ஷண்முகதாஸ் அவர்கள் அளித்த

(சாற்று கவி)

வெண்பா

சண்பகலிங் கேச்சுரன்மேற் ருன்கா வடிச்சிந்தை
நண்பனரு ணாசலந்தோன் நன்கிசைப்பப்-பண்பரு ணூல்
பார்த்தேன்பத் தித்தேன் பருகினேன் என்பணியும்
சேர்த்தேன் உவந்து களித்தேன் !

(சந்தக் கலித்துறை)

உற்றமெய்ப் பக்தியி லுயர்ந்தவரு
ணாசலன் உய்வகையில் தான்
பெற்றறிவிற் கெட்டியதைச் செண்பகலிங்
கேசன் பிறங்கருளி னல்
நற்றமிழ்ப் பாவடிவைக் காவடிச்
சிந்தென நவின்றன னதால்
கற்றவர் குற்றங் களைந்தவன்
பக்தியைக் கைக் கொள்வரே !

சேதுநாட்டுத் திருமருதூர், உயர்திரு. சித்திரகவி

வி. சத்திவேல் ஆச்சாரியார் அவர்கள்

மனமுவந்தளித்த சாற்றுகவி

(நேரிசை வெண்பா)

கண்பகலும் அல்லுங் கருத்தாய்த் தவமிருந்து
செண்பகமூர்த் திக்கினிய சிந்துரைத்தார் - நண்பர்
அருண சலத்தேவர் அன்புவைத்துக் கற்ருற்
கருண லயன்காண்க லாம்!

ஸ்ரீ சண்பகமூர்த்தி காவடிச்சிந்து

கணபதி காப்பு

தித்திக்கும் முக்கனியும் செங்கரும்புந்
தேன் சுவையும் திகழ வுண்ணும்

அத்திக்கு நிகராய ஐயனது
நற் சேவைக் காளாய் ஞானம்

சித்திக்கும் படியுதவும் செண்பகலிங்
கேசன்மிசை சிந்து பாடப்

பத்திக்கும் முத்திக்கும் வரமருளு
மைங்கரன் பொற் பதங்காப்பாமே!

ஆனந்தக் களிப்பு

திருமருவும் பரஞ்சோதி வாசன்—மக்கள்
தீவினையைத் தீர்த்தருளும் திருவருள் விலாசன்

அருமறைகள் போற்று மருணேசன்—பணியும்
அன்பர்கட் கின் பூட்டும் செண்பகலிங்கேசன்

தீராதக் குறை தீர்க்கும் சித்தன்—தினமும்
தெரிசிக்கு மெய்யன்பர் சித்தபரிசுத்தன்

மாறாத பேரின்பக் கர்த்தன்—இந்த
மாநிலத் தெங்கும் வணங்குபுகழ் நித்தன்

சுக்ரவாரந் தோறும் நாடி—பெண்கள்
சூழ்ந்து மகவைக் கோரி சேங்கையில் நீராடி
எக்குறைகளும் நீங்கக் கூடி—காதிற்
கினிய பண்கள்பாடிப் பணிவார் கொண்டாடி

பக்தியுடன் விரதம் பல விருந்து—ஐயன்
பதமதைத் துதிப்போர்க்கு அதுநல் விருந்து
எத்திசையுங் காக்கு மாமருந்து—எனவும்
எண்ணி வருவோர் களுக் கிதமூட்டுங் குருந்து

சேந்தநதி யெழுவை நகராரும்—வளமை
சேரோடை மாநகரி ரட்டைக்குளத்தாரும்
தேர்ந்திந்த நான்கு பேரூராரும்—எங்கள்
தெய்வம்குல தெய்வமென உய்வர்மிகு சீரும்

நன்னயக் கோபுரலங்காரம்—காணும்
நவரத்ன மணி மண்டபத்தின் சிங்காரம்
சொன்ன மயமாய்த் திகழ்வித்தாராம்—ஜெகஜ்
ஜோதியாய்ச் சோபிக்கும் சிகர கெம்பீரம்

அன்புயரு மறிவாளர் தஞ்சம்—புகுந்து
ஐந்து பூதங்களையு மொன்ருக்கி நெஞ்சம்
இன்புறக் காண மிகுவஞ்சம்—என்ற
இடையூறு போக்கு மென்னப்பனடிக் கஞ்சம்

உத்தண்டனுகப் படி காக்கும்—பூத
உருவங்கள் காணமயிர்க் கூச்சலையுண்டாக்கும்
எத்தருணமும் அதை நோக்கும்—ஆவல்
எழுமாறு பலவகையிலும் தன்னை யூக்கும்

மங்கையயே யிங்கிதம் ஊறி—நிற்கும்
வான்பரிகளைப் பாரு நீ இளைப்பாறி
சங்கமொடு ஐயனதி லேறி—இந்தத்
தரணியைக் காத்தற்குச் செய்வான் சவ்வாரி

என்றும் நமைக்காக்க வந்த ஐயன்—கருப்பன்
இருளனொடு சன்யாசி யக்னி வீரையன்
மன்றிற் புகழ் யிருபத்தோர் பந்தி—காளி
வயிரவன் இருளாயி ராக்கச்சி நந்தி

நான்கு புறமும் மனதிலெடுத்து—கோட்டை
நடுவிலுயர் கொடிக்கம்ப மயத்தைப் பாரடுத்து
தேன் மொழியே யெனதுயிர்மானே—சோலை
திகழ்வது நல்லழகாம் விசித்திரந்தானே

தேவர் சித்தாதிகள் மகிழ்ந்து—தபசு
செய்து நமதையனைச் சிந்தையுள் புகழ்ந்து
மூவர் முதலோனே யெனத் துதிப்பார்—துதித்து
மும்மலமகற்ற வழி தன்னுள்ளே விதிப்பார்

சித்திரை வைகாசி யானி—கொண்ட
செவ்வாயி லுற்சவம் சிறப்புறு பிரதானி
பத்திர பல புட்பங்களாலே—மிக்க
பரிமளிக்குந் தெய்வமிது பாருன் அன்பாலே

கோடானுகோடி ஜனக் கூட்டம்—ஐயன்
கோயிலை வலம்வரும் காவடியெ தேட்டம்
ஈடாயிதற்கு வொரு யெல்லை—எடுத்து
இயம்ப வென்றால் வுலகி லெங்குமே யில்லை

கிரிசுத்தி வருவார்கள் கோடி—பஜனைக்
கீர்த்தனங்களாலெழும் நாற்கவிகள் பாடி

தெரிசித்து நிற்பவ ரனேகம்—வினைகள்
தீர்த்தற்கு யிங்கு பலர் செய்வார்கள் யோகம்

தேடற் கரிதான பரம்பொருளே—எங்கள்
தெய்வமே கண்கண்ட திருநடன வருளே

வாடாத மெய்யருட் குன்றே—மக்கள்
வழிபாட்டுக் கன்புற்று வந்தருள் என்றே

சாது சர்ச்சனர்கள் துதிபாட—தவளச்
சங்கொலிக ளொடுதாள மேள யிசைகூட

ஓது மந்திர முழங்கு முருவே—நாங்கள்
உனதடியை மறவாமல் உயர்கருணைக் குருவே

திருவாகி நடமாடும் நாதா—அன்பர்
சிந்தைகுடி கொண்டநற் றிருவே யத்வீதா

அருளுருவமே யாடி வாவா—நின்னை
யன்றி யெமக் காதரவிங் காருண்டு தேவா

இன்னுமனமிரங்காத தேனே—கல்லோ
யிரும்போநின் றிருவுள்ளம் யிதுவுமுறைதானே

கன்னல்மொழி பேசியன்பு கொண்டு—கடைக்
கண்பார்க்க யென்றென்றும் செய்குவோம் தொண்டு

அன்பருளத்தேயாடும் ஐயா!—நாங்கள்
ஆண்டவா நினதடிமை யென்பதும் பொய்யா

நம்பினோர்க் கின்பூட்டுந் தேவே—எந்த
நாட்டினரும் போற்ற வரும் நல்லருட் கோவே

என்றுமென் மனநெகிழ்ந்தோதி—துதிகள்
இயற்றவரு மெங்களின் யிதய பரஞ்சோதி
மன்றுளென துடலாவி பொருளும்—இன்னு
மற்றும் நீ யல்லவோ யென்பக்திக் கருளும்

செண்பக லிங்கேசா நீ மனம் வை—இந்த
ஜென்மாவி லென்வினையைத் தீர்த்தருள் தயைசெய்
உண்மையில் யெனைச் சோதியாதே—விரைந்
தோடிவந் தேயெனக் கருள்தா விப்போதே

கந்தந் திமிர்ந்திலகு நாதா—சிரசில்
கனக நவரத்ன முடி யணிபர விநோதா
சுந்தரமிகுந்த குணநீதா—ஞான
தோத்திரத்திற் குரிய துணையே சுபோதா

தன்னிகரில்லாத சர்வேசா—தானே
தானய் முளைத்த ஓம் சண்பகலிங்கேசா
உன்னத சித்தாடும் பிரகாசா—மக்கள்
ஊழ்வலியை நீக்கவந்த ஓபவவிநாசா

உன்மகிமை அறிபவரு முண்டோ—அகில
உலகெலா மோதியுணராதவன் நீயன்றோ
நின்மலா நிற்குண வதீதா—வேத
நெறிமுறை வழுவா நிரஞ்சன சமேதா

இன்னும் பராமுகம் ஏது—பிழைகள்
யெது நேரினும் பொறுத்தாள்வா யிப்போது
நின்மாயம் ஏழையறிவேனே—தள்ளி
நீக்கிடினும் நின்கழலை விட்டு விடுவேனே

மங்கள கல்யாண குணபரனே—என்முன்
வந்திட நிலையன்பு காட்டுந்திருக் கரனே
பங்கய பதம்போற்றி யையா—பாடும்
பக்தர்களைக் கொண்டணைக்கும் ஞான மெய்யா

ஜெகஜ்ஜோதி மயமான தேவே—இந்திர
தேவாதி முனிவர்கள் சிந்திக்கும் கோவே
பகலிரவிலாத பரவெளியே—தேவி
பதியேயிவ் வுலகிலணை யாத பேரொளியே!

ஐயனின் ஆதிபூர்வம்

வெள்ளை உகாவொடு குருந்தும்—பொருந்தி
வீசுநிழல் மேடையினி லிங்கமாயிருந்தும்
உள்மூலமாய் லிங்கபலமே—உலகில்
ஒருவருங் காண முடியாதுயர்ந்த நலமே

எல்லோருந் தொழவந்தமர்ந்து—மக்கள்
இணையற்ற தெய்வமெனும், எண்ணத்துறைந்து
சொல்லாட வெழுஞான மதியே—பக்தி
தோயவருந் தூய செண் பகலிங்க பதியே

கட்டையால் காலிடறப்பட்ட—ஆயன்
கைவசமிருந்தபா லங்கனங் கொட்ட
திட்டமிட் டவனதை வெட்ட—குருதி
சீறிட்டெழுந்தவ னுடல் முழுதுஞ் சொட்ட

அங்ஙனமே கண்ணிஞெளி மங்க—என்ன
அதிசயமிதென்றவன் அழுது குரல் பொங்க

பங்கமுற வைத்த பெருமானே—உலகில்
பலமக்கள் தவறையும் பொறுப்பது நீதானே

ஐயா நானுனதடிமை யன்றோ!—ஏழை
யறியாமற் செய் பிழைக்காக இது நன்றோ

நையாது நீ பொறுத்தருள்வாய்—விழிகள்
நன்ருகத் தெரிய நீ நல்லவர மருள்வாய்

என்றவன் வேண்டற் கிசைந்து—ஆதி
இறைவன் நம்மடிமை யென்றிரங்கிக் கசிந்து

சென்ற காலத்திலிவன் தொண்டு—நமக்குச்
செய்தநற் பக்தனெனத் திருவுளங் கொண்டு

கண்ணிலானுக்குக் கண்ணளித்து—அன்புக்
கையினலவனை நன் காதரித் தணைத்து

புண்ணியப் புகழேற்ற பேரே—தெய்வ
பொக்கிஷமே யுனையன்றி யெனைக் காப்பதாரே

கண்பெற்ற ஆயன் மலர்தூவி—வெட்டும்
கட்டையைத் தொட்டுக்கும்பிட்டு அருள்மேவி

பண்பாடவந்த திருப்பணியே—ஓ செண்
பகலிங்க மாயெழுந்த பரம சிவமணியே

எனத்தொழுது ஐயன் குடியிருக்க—அந்த
இடத்திலேயே நல்லதொரு வல்லருள் பெருக்க

தனது பெயராலே நற்கோவில்—ஒன்று
தானமைத்திட சித்து தங்கியதிப் பூவில்

ஆலயத்தைக் காண வுளங்கவியும்—தன்னை
யறியாமலே சிரசிற் கரமிரண்டுங் குவியும்

சாலப் பெரியோர்க் கையன் சேவை—மனது
சாந்தியுற மெய்யிற் சதாவுமே தேவை

குதிரைக்களியாட்ட மென நின்று—பலர்
கூத்தாடுவார் வந்து நேர்த்திக் கடனென்று

அதிரவரு முரசொலி முழங்க—நமது
ஆண்டவன் சந்நிதிமுன் வேண்டலை வழங்க

பால்கட்டுங் காவடிமுன்னேறி—ஐயன்
பக்தியால் தனைமறந்து கோஷங்கள் மீறி

சேல்கொண்ட காவடிகளோடும்—கூவும்
சேவற் காவடி சர்ப்பக் காவடியுங் கூடும்

சர்க்கரை வழங்க லொருபக்கம்—படைத்த
சகல கனியுஞ் சூறையிடுவதொரு பக்கம்

கொக்கரிக்கு மருளரொரு பக்கம்—சேர்த்துக்
கொண்டுவந்த உண்டியலைக் கொடுப்பதொரு பக்கம்

கொற்றவரும் மற்றவருந் தேடி—வந்து
குழந்தைகளின் முடிதந்து கும்பிட்டுக் கொண்டாடி

சுற்றி வலம் வந்துருண்டு கொடுத்து—சுவாமி
துணைசெய்ய வேண்டுமெனத் தொழுவார்கையெடுத்து

பொற் பூஷணங்கள் பலசாத்தி—வாசப்
பூமாலைகளை யையன் சிரமதில் ஏத்தி

கற்பூர தீபவா ராத்தி—செய்வர்
காணக்கண்ணாயிரம் வேணும் வெகு நேர்த்தி

சமையனும் வீரபத்திரரும்—கருப்பன்
தவநந்தி மாகாளி பேச்சி புத்திரரும்
அமைந்திலகு மழகைப்பார் பெண்ணே—இந்த
அம்சத்தை யென் சொல்லுவேன் எனது கண்ணே

தானதன, தானதன வென்றே—சிந்து
சந்தக்கவி இனியசெந் தமிழால் முயன்றே
ஆனந்தக் களிப்பிதனைப் பாடும்—கேட்கும்
அன்பர்களின் மேலருள் வந்து விளையாடும்

சுந்தரநல்லோடை நகர்சீலன்—சத்ய
சுதனாக வந்தே பிறந்த வனுகூலன்
அந்தமிகு நந்திகுல லோலன்—பழநி
யாண்டி யண்ணல் தவத்தேயுற்ற பாலன்

கல்லோ ரிணக்க மதனாலே—கவிகள்
நான்குந் தெரிந்துசொல் ஞாயமுறை போலே
எல்லோர்க்கு மேயிறைவன் மேலே—பக்தி
ஏற்பட்டு ஞானவழியினிதுற விக்காலே

அன்பர்மகிழ் செண்பக சபேசன்—கவியி
னார்வமிகு வித்வ அருணாசலத் தாசன்
இன்புறச் சொல்சிந்தின் கானம்—கேட்க
இதயத்திலுண்டாகும் இணையற்ற ஞானம்

★ ★ ★

வேறு சந்தம்

தானதன தானதன தான—தன
தான—தன தான—தானம்
தானதன தானதன தான—தனனம்
தன்னதன தன்னதன தன்னதன
தன்ன தன தான தன தான

செண்பகலிங்கேசனையே தேடித்
தினமே கூடி செல்வோம் நாடி—நாம்
சீருடன் காவடிச் சிந்து பாடி—நல்ல
சித்திரத்தினைப் பழித்த ரத்தினசிகாமணி யென்
தேனே மட மானே

அருமறைக் கெட்டாத நீதனாலே
அருள் மென்மேலே அமைந்த தாலே—கோயில்
அழகு மிகுந்திட்ட துவிக்காலே—எந்தன்
ஆசையுயர் நாயகியே நேசமுற வே பணிவோம்
ஆர்ந்து மதி தேர்ந்து

பங்கய குஞ்சித மலர்ப் பாதன்
பக்தர் நீதன் தத்வ போதன்—நமது
பண்புக்குகந்த செண்பக நாதன்—தனைப்
பாங்குடனே நாம் பணிந்தால் தீங்குகளனைத்துமுடன்
பறக்கும் அருள் பிறக்கும்

அண்டர்பிரான் சந்நிதியை நேராய்
ஆழ்ந்து பாராய் அழகைச் சீராய்—திரு
ஐயனருள் காணுமுயர் பேராய்—இது
வன்றியும் பூதங்களிங்கே நின்றுகாவலே புரிந்து
ஆடும் ஆர்வத் தோடும்

பாரிற் பலர் பக்தியினிற் றேர்ந்து
பதியைச் சேர்ந்து மிகவும் ஆர்ந்து—சேங்கைப்
படியிலே நீராடி மனமோர்ந்து—மிகப்
பணியுமன் பருக்கையன் புகிதக்குழந்தை வரந்
தருவார் மக்கள் பெறுவார்

சித்திரை வைகாசி யானி தனிலே
செவ்வா யினிலே சிறப்பினிலே—சிவ
செண்பகலிங் கேசன் கோவி லினிலே—பரி
சீர் பொருந்தவே யெடுத்து பேர்பெருக வேதுதிப்பார்
தேனே மடமானே

மாடமாளிகை பொன் மணிமேடை
வர்ணத்தாடை வயங்கு தூடே—இரண்டு
வான்புரவி நிற்பதுதன் னேடே—உயர்
வாகுகள்கோ டாகோடிய தாகவேயிருப்பதைப்பார்
மாதே நீயிப் போதே

காவடி யெடுப்பா ரங்கு கோடி
கருத்துநாடி யன்பு கூடி—கிரையம்
கட்டி வருவாரருட் கொண்டாடி—தீன
கருணகர நிதியே யருள் புரிவாயெனத் தினமும்
காண்பார் களி பூண்பார்

சர்க்கரை பாற் காவடிகள் யெடுத்து
அருள் தொடுத்து சந்நிதி யடுத்து—தனன
தானன வென்றே சிந்து படித்து—அவர்கள்
தன்னை மறந் தோராகி முன்னவனை போற்றியாடு
வாரே அடியாரே

ஆடரவக் காவடியின் சீரும்
அருள் கொண் டேறும் அகம் தேரும்—ஐயன்
ஆலயத்து முன்னே வந்து சேரும்—சேர்ந்து
ஆதிபகவானே யென்றுவோதி ஆடுவார்கள் களி
ஆட்டம் வெகு கூட்டம்

மச்சமதைக் கட்டி யன்பு காட்டி
வழிகூட்டி யருள் பூட்டி—கோயில்
வாசல் முன்பு நிற்பர் மதிநாட்டி—அங்கே
வரங்கள் கொடுப்பதுவும் விரதங்களிருப்பதுவும்
வாசம் மெய்ப்ர காசம்

இன்னமுங் கண் காட்சிபல இருக்கு
ஈசன் பெருக்கு எடுத்தோ துதற்கு—என்னல்
இயம்ப முடியா திங்குள வருக்கு—ஞான
இன்பமதைத் தந்துதவும் அன்பர் மகிழ்செண்பகலிங்
கேசன் விசு வேசன்

ஆதி பகவானே யருள் தாரும்
அடியேன் கோரும் அன்புகூரும்—எனது
அப்பனே வந்தென் குறையைத் தீரும்—எனவே
அட்டியிலா மற்சனங்கள் மட்டிலடங்காத வராய்
அடுப்பார் அன்பு தொடுப்பார்

கிரிசுத்திடு வார்களொரு கோடி
கீதம்பாடி, மருளாடி வரங்
கேட்பார்களங்கு பலர் கூடி—நாமும்
கண்யமுடன் யீசனது சந்நிதிமுன்னே பணிவோம்
கிளியே கிளிமொழியே

கொண்டல் வளர் கின்ற மரச் சோலை
குயிலின் பாலே, கூவும் சாலை,—கண்டு
கோல மயி லாடிடுந்தெம் பாலே—மலர்க்
குள்ளிருக்கு மதுரமிகு கள்ளை மெள்ள வண்டினங்க
கூடும் சுதி போடும் [ளுண்டு

மந்தி யினங்கள் பொருத்த கூட்டம்
மரத்தி லோட்டம், யிடுமார்ப் பாட்டம்—அழகு
வாய்ந்த தாகக் காணுமது சிரேட்டம்—நல்ல
வானளாவு சோலையினில், மானுலாவி,யேதிரியும்
மங்கையே, இள நங்கையே

நால் வருணத் தாரு மிங்கு குவிந்து
நன்கு புகழ்ந்து, நலமிகுந்து—செண்பக
நாதனின் பதத்தில் அன்புகனிந்து—எந்த
நாட்டிருந்தும் வந்திடுவார் கூட்டங் கூட்டமாகவு
நாளும் உண்மை கேளும் [மெந்

சந்நதி நிறைந்த திருவாட்சி
தகுநற்மீட்சி வெகு மாட்சி—கண்டு
தான்வணங்கு வோர்க்கது கண்காட்சி—உயர்
சத்தியமே யுருவான கர்த்தனை நாம் நித்தமே
சார்வோம், கதி சேர்வோம் [கொண்

ஆற்றல் மிகும் அருணசலத் தாசன்
அன்பர் நேசன், இன்ப வாசன்—பணி
அய்யனென்னும் செண்பகலிங்கேசன்—தனக்
கற்புத நற் காவடிச்சிந்துப்புகழ் சேரப்புகன்ற
தந்தமே போற்றும் சந்தமே!

★ ★

வேறு சந்தம்

ஆதி பூ மாதுவளர் செண்பகலிங்
கையன் வளர்ந்தோங்கும்
சோதித் தலமகிமை—எளியேன்
சொல்லும் தர மாமோ!

முத்து முத்தாய்ச் சரங்கள்—தொங்கும் ஐயன்
முன்மணி மண்டபங்கள்!
சத்து சித்தாய் விளங்கும்—செண்பகத்
தாண்டவன் ஆட்சி செய்ய!

அற்புதமாமணியால்—அய்யனுக்கு
ஆயிரக் கால் சவுக்கை!
செப்புதற் கெட்டாத—சிம்மாசனம்
செண்பகத் தையனுக்கே!

அக்கினி வீரபத்ரன்—சன்னசி
அம்மையர் பொற்றவிசும்
திக்கிலுள்ளோர் துதிக்கும்—கணேசன்
சிங்கார மண்டபமும்

ஆணிப் பொன்னு விழைத்த—அய்யனுறை
அற்புத மண்டபத்தில்
காணிக்கை யும்போட்டு—மாசனங்கள்
கை தொழும் பீடமீதே!

கச்சை வரிந்து கட்டிக்—கருப்பண்ணன்
கையரிவாள் பிடித்து
பச்சைச் சரம் துலங்க—நிற்கு மொரு
பளிங்கு மண்டபம் பார்!

விண்ணை யளாவியதோர்—கோட்டைகளும்
மேவி அய்யன் பதியில்
தென்னையும் வாழையுமே—கமுகுமே
சீர் சிறப் புற்றதுவே!

அன்பர் மகிழ் நாதன்—வளர்ந்திடும்
ஆலய முன்பாக
செண்பகப் பூங் காவின்—வளமையின்
சிறப்பை யென்ன சொல்வேன்!

மாவும் பிலா மருதும்—கொய்யாவும்
வான்தவழ் மூங்கில்களும்
தாவும் தருக்கள் பல—வளமைகள்
சாற்றுதற் கொண்ணுதாம்!

வாழையுடன் கரும்பும்—நாருத்தையும்
வாச எலுமிச்சையும்
பாழை யொடு தாழை—மலரும்
பரிமளிக்கும் இனிதே!

ஆலுடன் இத்திகளும்—வேலா வன்னி
அத்தியும் மாகடம்பும்
மேலும் அளாவிய தோர்—சோலைகளின்
வித்தார மென்ன சொல்வேன்

வேம்புடன் பூவரசும்—புன்னையுடன்
வேங்கையும் நாங்கில்களும்
கோங்குடனே புளியும்—நவ்வை நெல்லி
கூடிய சோலைகளும்

மல்லிகை முல்லைகளும்—யிருவாச்சி
வாசந்தரும் மருவும்
மெல்லிதழாம் ரோசா—சிவந்தியின்
மேன்மையை யென்ன சொல்வேன்!

பந்தி பந்தி யாகவே—செண்பகப்
பரிமள வாசனையும்
நந்தியா வட்டமொடு—அய்வரளி
நல்ல மருக் கொழுந்தும்

இன்னு மநேக மலர்—வகையுண்டு
எண்ணில் அடங்கிடுமோ!
நன்னய மாகவேதான் செண்பக
நாதனின் ஆலயத் தே!

மாங்குயி லுங் கூவ—மலர்களில்
வண்டினம் பண்பாடும்
சோங்குடனே மயிலும்—நர்த்தனம்
தோகை விரித் தாடும்

வான்மீ துலாவிய தோர்—சோலைகளில்
மாவும் பலாப் பழமும்
தேன்மீதினிற் கசிந்து—வழியுஞ்
செய்தி தனை யறிந்து

மந்தி பெருங் கூட்டம்—அங்குபெண்
வானரங்கள் நாட்டம்
சிந்திவரு மமுதை யள்ளி யுண்டு
சிந்தை மகிழ்வு கொண்டே

துள்ளி விளையாடி—காதலொடு
சோலையிலே கூடி
தெள்ளிமை யாகவேதான்—அய்யனது
சேவடி போற்று மிங்கே!

தேவமட மாதர்—நிதம் வந்து
செண்பகக் காவினிலே
ஆவலுடன் மலர்கள்—எடுத்துமே
அய்யனுக்கே கனிவாய்

சித்திர மாலை கட்டி—தெய்வப் பெண்கள்
செண்பகத் தையனுக்கே
பத்திர புட்பமெல்லாம்—சூட்டி ஐயன்
பாதம் தனைப் பணிவார்!

வேங்கை யுடை மரமாம்—தென்னைபனை
வேம்பு வேலா வன்னியும்
சேங்கைக் கரைதனிலே—நிற்கின்ற
சீர் சிறப்பென்ன சொல்வேன்!

வக்காவும் கொக்குகளும்—நாரையொடு
வாள் வாங்கிப் பட்சிகளும்
எக்காளம் போடுதல்லோ—யென்னய்ய
னிருக்கும் தலந்தனிலே!

புள்ளிமானும் முயலும்—செண்பகையன்
பூங்கா வனந் தனிலே
துள்ளி விளையாடித்—திரிகின்ற
சொகுசை என்ன சொல்வேன்!

சுற்றிலும் சோலைகளும்—சேங்கையினில்
சூழ்ந்ததோர் வாவிகளும்
தத்தி யலைமோத—மச்சங்களும்
தாவி விளை யாடும்!

வானை விராலினமும்—பல்வகை
மகரமும் கெண்டைகளும்
தாழை மடல் மேலே—தாவி மோதும்
தன்மை நானென்ன சொல்வேன்!

சீர்சிறந் தோங்கி வளர்—சிறுவனூர்
சேர்ந்த வாகைக்குளமாம்
தாரணியோர் புகழும் நந்திகுலம்
தான்வந்து தித்தவராம்!

பாதி மதியணியும்—சிவபிரான்
பாதம் தனைப் பணிவோர்
ஆதிமூலத்தேவர்—சுதனாக
அன்பாய்வந் துற்றவராம்!

கத்துங் கடலுலகில்—செந்தமிழ்க்
கலைகளும் கற்றவராம்
முத்து ராசுத் தேவர்—தர்மமிது
மொய் குழலே—பாராய்!

கண்ணுயி ரமுடையோர்—அருளுற்ற
சந்நதி முன்பாக
விண்ணாடு போலழகாய்—மடமிங்கே
மேதினியோ ரமர

அந்தணரும் பெரியோர்—சித்தர்முத
லானதோர் மாமுனிவோர்
சிந்தைவைத்தே வருவார்—அன்ன தானம்
செய்யு மடமிதுவே!

இன்னுமனேக முண்டு—மகத்துவம்
யெத்தனையோ கோடி
சொன்னலடங்காது—ஆதிசேடன்
சொல்லவும் கூசிடுவான்!

கன்னல் மொழிவாசன்—செண்பகலிங்
கையனின் தன்னருளால்
நன்னயமாய்த் தலத்தின்—மகத்துவம்
நாவினல் நானுரைத்தேன்!

கல்வி கரைகடந்து—பொருள்களைக்
கற்ற பெரியோரே
புல்லியன் வுங்களது—மலரடி
போற்றியிந் நூல் பகர்ந்தேன்!

அருத்தம் சீர்முதலாய்—மோனைமுத
லாயபிழை யிருந்தால்
திருத்தம் செய்துமேதான்—கொடுப்பது
தேர்ந்தவர் தங்கடனே!

மாவடி வாகவந்த—செண்பகையன்
வாழும் மகத்துவத்தை
காவடிச் சிந்தாகச்—சொன்னவரைக்
காலமு வாழியவே!

சிந்தைவைத் தன்புடனே—என் பிழையைச்
சீர் திருத்தம் புரிந்தோர்
நிந்தை யகன்றுலகில்—இன்பமுற
நீடூழி வாழியவே!

ஆசையுடன் படிப்போர்—பொருள்களை
யானந்தமாய்க் கேட்போர்
பாசவினை களைந்து—யென்நாளும்
பண்புற மங்களமே!

மங்கள மங்களமே—நான்மறைகள்
வாழ்வுற மங்களமே
மங்கள மங்களமாய்—அய்யனருள்
வாழ்வுற மங்களமே!

★ ★ ★

ஸ்ரீ சண்பகமூர்த்தி வருணிப்பு

சேந்த நதிக்கரையாம் செண்பகலிங் கையனுக்குத்
தென் சேங்கை மால் கரையாம்
பாந்தலடை காத்திருக்கும் பகவான் தலத்தில்
பலவிருட்சம் சூழ்ந்திருக்கும்!

மயில்கள் நடனம் புரியும் செண்பகலிங் கையனுக்கு
மாஞ்சோலை சூழ்ந்திருக்கும்
குயில்களிசைபாடும் பகவான் தலத்தில்
கோலவண்டு ராகமிடும்!

வக்காவும் கொக்குகளும் நாரையோடு குருகு
வாள்வாங்கிப் பட்சிகளும்.

எக்காள மாயிருந்து பகவான் தலத்தில்
இரைச்சலுடன் கூச்சலிடும்!

ஊனன் கொடிபடர்ந்து உடைமரங்கள் முன்விரிந்து
ஓங்கிவளர்ந் தேயிருக்கும்!

தானாய் முளைத்து வந்த தண்ணுயிர மூர்த்தி
தற்பரனின் சந்நிதி நேர்!

வெள்ளை வுகா மரமாம் வேதாந்த சொரூபனுக்கு
வீற்றிருக்க மண்டபமாம்

உள்ளே முளைத்துவந்து உருவாயருவாய்
உகந்திருக்கும் காலமதில்

நந்தகோன் வம்மிசத்தான் ஆடுகளை மேய்த்து
நலமுடனே யவ்வழியே

பந்தமுடன் பால்கறந்து பகவானிருக்கும்
பதி யதனை நாடிவர

கட்டைபோல் தட்டிவிட ஆயன் மகனங்கே
கால் இடறிப் பால் சிதற

தட்டியவிக் கட்டைதனை நானிதோவெட்டித்
தகர்க்கிறேன் பாரென்றுரைத்து

குடிபுகுந்து சேந்தநதி மாநகரம் சென்று அவன்
கோடரியைக் கொண்டுவந்து

அடிவரையும் வேர்ப்பறித்து பகவான் தனையே
ஆயர் மகன் வோங்கி வெட்ட

கட்டையென்றே வெட்டிடவும் ரத்தம்பீரிட ஆயன்
கண்டதுமே யத்தருணம்
முட்டை யவித்ததுபோல் அவனிரண்டு கண்கள்
முழுதும் ஒளிமழுங்க

அய்யா தெரியாது அடியேனுக் குன்மகிமை
ஆதரிக்க வேணுமெனே
மெய்யாகக் கூறுகின்றேன் வேதாந்த ஸ்ரூபா
விமலா மன்னித்தருளும்

கண்ஒளிதுலங்கவேணும் ஆதிபகவானேயுன்
காரணப் பேர் சொல்ல வேணும்
மண்ணிலுள்ளோர்களெல்லாம் வந்துன்னைப்
வணங்கித் துதிக்க வேணும் [போற்றி

இன்றைக்கிருந்து யென்னுடைய வம்மிசத்தார்
எல்லோரும் உன் அடிமை
என்றந்த ஆயன் ஐயன்பதத்தில்
இறைஞ்சிக் கண்ணீர் வடித்தான்!

ஈசன் மனமிரங்கி யிடையன் மகனுக்கு
இரண்டு கண்ணும் தான் தெரிய
பாசமுடன் செய்துவைத்தார் செண்பகலிங்கேசன்
பகர்ந்தார் பெரியோர்கள்! [எனப்

தானுய் முளைத்தலிங்கம் தண்ணுயிரமூர்த்தி
தங்கமய மான லிங்கம்
மானே யென்று வுரைத்துக் குளுதாளியாலே
மறைத்துவிடு மென்று சொல்ல

கோபாலன் வம்மிசத்தான் குளுந்தாளிதனையே
கொண்டு வந்து மூடி அங்கே
பாவாணவர் போற்றுகின்ற பகவான் தனையே
பக்தியுடனே வணங்கி

சேந்த நதிநகர்க்கும் யெழுவை நகர்க்குஞ்
சிறந்த ஓடாத்தூர்க்கும்
பாந்தமுள்ள ரெட்டைகுளத் தார்க்கும் வுரைத்துப்
பதி தனக்குச் சென்றனனே !

நாலூர் சனந்திரண்டு செண்பகலிங் கேசனது
நற்பதத்தைப் போற்றி செய்து
சேலூர் நதி வுண்டாக்கி மண்டபங்க ளெல்லாம்
சித்திரங்களா லமைத்து

குதிரை அலங்கரித்துப் பூதங்கள் ரெண்டும்
கொலுக் கூடக் காவல் வைத்து
கதிரவனைப் போலொளிர சிம்மாசன மூதலாய்க்
கர்த்தனுக்குத் தானிசைத்தார் !

கருப்பன் வலதுபுறம் இருபத்தோர் பந்தியென்ற
கர்த்தாக்கள் தானிருக்க !
விருப்பமுள்ள மண்டபமாய் கருப்ப னிருப்பதற்கு
விமரிசையாய்த் தானமைத்தார் !

அன்பர் தமைக் காத்தலிங்கம் அடியார்களுக்கெல்
அருள்தரவே வந்த லிங்கம் [லாம்
சென்மவினை தவிர்த்து செகத்தோரைக் காக்கவந்த
செண்பக லிங்கமிதே !

மூவர் முதலான லிங்கம் பக்தர்களுக் கெல்லாம்
முத்தி தர வந்தலிங்கம்!

தேவர்க் கமுதளித்துச் சித்து விளையாடவந்த
செண்பக லிங்கமிதே!

கதிரொளி போல் வந்தலிங்கம் காட்சிமிகவளித்துக்
காக்கவந்த மூல லிங்கம்

கெதியோ கெதியெனவே கிட்டிப் பணிந்தோர்கள்
கேட்கும் வரமீயும் லிங்கம்!

பூரணச்சந்திரோதயம் போன்ற முகத்தழகு
பொருந்தி வளர் சொர்ண லிங்கம்

தாரணியிலுள்ளோரைத் தண்ணுயிரமூர்த்தி
தற்காக்க வந்த லிங்கம்!

வொள்ளை வுகா வேரினுள்ளே வேதாந்த சொரூபம
வித்தாய் முளைத்த லிங்கம் [தாய்

உள்ளே மறைபொருளாய் ஒருவருக்கும் தோற்றாது
வுகந்திருக்க வந்த லிங்கம்!

வையகத்திலுள்ளவர்கள் மாதேவ தேவவென
வந்து வணக்கத்துடனே

அய்யனென்றே கைகுவித்து அன்பாய் பணிவோர்
அருள்தரவே வந்தலிங்கம்! [க்கு

ஆராரிருந்தாலும் ஆதிபகவானே யெனை
ஆதரிப்பார் தானுமில்லை

சீர் சிறந்து மேவிவளர் செண்பகலிங்கையா நின்
சேயனையே காத்தருள்வாய்!

எத்தனைபேர் வாழ்ந்தாலும் யெனையாண்ட அய்யாவே
என்னிடர்கள் தீர்ப்பவரார்?
சித்தமது தானிரங்கி செண்பகலிங்கையா யென்
தீவினைகள் தீர்த்தருள்வாய்!
கடவுளில்லை யென்று சொல்லும் கர்மச்சண்டாளர்
காசினியிலே னுதித்தார்?
கடவுளில்லை யென்போர்க்கும் நல்லறிவை யூட்டிக்
கருணை செய்வாய் தற்பரனே!

★ ★ ★

ஆசிரிய விருத்தம்

ஆத்திகர்க் கன்புசெய் தவரோ டிணங்கிமகிழ்
ஆற்றலை அடைதல் வேண்டும்!
அயல்மாத ராசைமது பொய்களவு கொலை யைந்து
மறவே ஒழித்தல் வேண்டும்!
நாத்திகப் புல்லரை நலமற்ற சொல்லர்தமை
நாடாதிருத்தல் வேண்டும்!
நானெனு மகந்தைகொண் டுழலாது நினதுதிரு
நடன வெளி நாடல்வேண்டும்!
தோத்திரப் பாக்களேழ் கடல்மடை யெனவருட்
டுரிய வாக்கருளல் வேண்டும்!
தொழிலேது செய்கினும் நினதுபணி யாகமிளிர்
சோதிபோல் நிலவ வேண்டும்!
வாத்தியச் சப்தமிக எழுவை மாசேந்தநதி
வளரோடை யிரட்டை குளமும்
வந்திக்க உலகெலாம் சிந்திக்க வளர்கருணை
வரத செண்பக லிங்கமே!

ஸ்ரீ முருகன் தோத்திரம்

ஆசிரிய விருத்தம்

அரகரம காதேவா ஆறுமுக மானவா
ஐந்துகர னுக் கிளையவா
அசுரர்கிளை யாவுமடி யோடறச் செய்தவா
ஆனந்த மயமானவா

சரவணப வாகுகா சண்முக சடாட்சரா
சாமிமலை தனி லுறைபவா
தாராரு மாலையணி யீரறு புயத்தவா
சக்திவேல் கைக் கொண்டவா

கரமுருக னவா கந்தனென வந்தவா
கார்த்திகே யாகடம்பா
கலியுகத் தெய்வமாய்க் காட்சிதர நின்றவா
காவடிகொண் டாடுமுதல்வா

பரமர் புத்திரனென பாலசிவ சண்முகா
பன்னிருகண் ணுற்ற குமரா
பச்சைமயி லேறிநீ யிச்சணங் குறைதீர்க்க
பக்தனெதிர் வரவேணுமே ! (1)

வள்ளிமண வாளனே வரமருள் தயாளனே
வாலையுமை யாள் பாலனே
வச்சிராயு தங்கொண்ட வண்ணமால் மருகனே
வையா புரிக் கிறைவனே

தெள்ளிதய னேதெய்வ குஞ்சரி சலாபனே
செஞ்சேவற் கொடியாளனே
தேவசே னதிபதி யேபரங் குன்றனே
தென்பழநி மலையதிபனே

புள்ளிக் கபாலமயி லேறிவிளை யாடிவரும்
புநிதனே பொற்கழலனே!

பூமனைச் சிறையிட்டு வாமனுக் குபதேசம்
புரிந்த சற் குருமூலனே !

எள்ளுக்கு ளெண்ணெயென வெங்குநிறை பொருளா
யிணைந்தகுண னேயன்பனே !

எனதா ருயிர்க்குயிர தானதவ மணியே நீ
எனதுமுன் வரவேணுமே ! (2)

ஈசனது நெற்றிவிழி யதிலாறு பொறியா
யெழுந்த மெஞ்ஞான கருவே

யீரேழு பதினன்கு லோகமு முதித்திடும்
இன்னிசை யதான தருவே

பாசமுறு கைலையில் சரவணந் தன்னிலறு
பாலராய் வந்த மருவே

பக்குவத் துற்றநற் கார்த்திகைப் பெண்களின்
பாலமுதம் உண்ட வுருவே

நேசமுயர் பக்தரின் நெஞ்சினிற் குடிகொண்ட
நித்தியானந்த குருவே

நிகரிலா மாகுன்று தோறும்விளை யாடியே
நின்றருள வந்த திருவே

வாசமுய ராறுபடை வீட்டிற்கு மதிபனே
வளமேவு கழுகுமலையில்

வாழ்முத்துக் குமரனே சிவசுப்பிரமணியனே
வாழ்க நீ வரவேணுமே! (3)

★ ★ ★

வேறு விருத்தம்

பத்தியில் மூர்க்கப் பாதக ரிடமென்
பஞ்சமே புகன்றவர் தமைநான்
சித்திரப் பாவா லிந்திரன் ருதா
சீரிய பாரியென் றெளி செய்
தித்தரை மிசையான் உழன்றிடத் தகுமோ
எந்தையே நீயென்னுள் ளிருந்தும்
புத்தகத் தடங்காப் புதுமைகள் திகழும்
புனிதனே செண்பகே சுரனே !

சித்தரும் துரிய முத்தரும் பணியும்
தெய்வமே திருவருள் வடிவே
புத்தமு தேஎன் கண்களின் மணியே
புலவர்கள் நாயக மென்னும்
முத்தமிழ்க் கடலே பகலிர வறியா
மோன சிதாம்பர வெளியே
அத்தனே எழுவைச் செண்பகேசா நின்
அடைக்கல மெனையும் ஆண்டருளே !

(வாழ்த்து)

ஆழி யந்தண னன்பரு ளோங்குக
மேழி கைத்தொழில் வித்தைகள் வர்த்தகம்
சூழி லக்கியச் சொற்பொரு ளுன்மறை
வாழி ஞான்றுமிவ் வையக மன்னியே !

சுபம்.

பட்டனேந்தல் வைத்தியம்-சோதிடம்
ஆ. மா. சோமசுந்தர தேசிகரால் அளிக்கப்பெற்ற
(சாற்றுக் கவி)

உலகமெலாந் தான்புகழும் ஓடாத்து
ரம்பதியில் உதித்த செல்வன்!
நலமிருத்த செந்தமிழைக் கற்றுணர்ந்து
மேன்மேலும் நற்பே ரோங்குந்
தலமதிலே செண்பகத்தண் ணையிரர்மேல்
காவடிச்சிந் தடிகள் செய்த
கலைவல்லோ னென அரு ணசலத்தான்
நல்லிசையிற் களிகொள்வோமே!

சோழவந்தானைச் சேர்ந்த கோவில் தென்கரை
பெ. மூக்கன்சேர்வை அவர்களால் அளிக்கப்பெற்ற
(சாற்றுக் கவி)

சீர்சிறந்து மேவிவளர் தென்பாண்டித்
தேசமதில் செழித்த வோடாத்
தூர்தனிலே தோன்றியநற் சொற்சத்யன்
நல்லோரின் தொடர்புற் றேனிப்
பார்புகழுந் தாசனரு ணசலத்தான்
செந்தமிழின் பண்பா லின்பத்
தார்புனையுஞ் செண்பகன்மேல் காவடிச்சிந்
தென மகிழச் சாற்றினனே!

சௌத் இந்தியா பிரிண்டிங் ஒர்க்ஸ், மதுரை-'57.